**காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டம் - 2020**

---

காற்றலை மின்சக்தி உருவாக்கல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் மீதான கணக்காய்வு செயற்திட்ட நிர்வாக கைநூலின் V (D) ஆம் பிரிவு மற்றும் இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 நவம்பர் 22 ஆம் திகதிய 3585- எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02 ஆம் உறுப்புரையின் IV ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன

---

செயற்திட்டக் கடன் உடனபடிக்கைகளின் பிரகாரம் இலங்கை மின்சாரசபை செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. (அ) காற்றலை மின்வலு உருவாக்கல் அதிகரிபத்தல், (ஆ) மீள்சுழற்சி மின்வலு முகாமைத்துவ முறைமை முன்னேற்றம், (இ) செயற்திட்ட பொறியியல் வடிவமைப்பு மீளாய்வு மற்றும் மேற்பார்வையில் கடன் பெறுபவரின் இயலளவை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,923.06 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 256.70 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 31,104.84 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 8,818.22 மில்லியன் இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2018 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2021 மார்ச் வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல | கணக்கீட்டுக் குறைபாடுகள் | தொகை ரூபா | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | **இகநி 8 – கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தவறுகளில் கணக்கீட்டுக் கொள்கைகள், மாற்றங்கள்** செயற்திட்டத்தால் தொடர்ச்சியாக பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் கணக்கீட்டுக் கொள்கையில் குறிப்பிடப்பட்டவாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், ரூபா 28,642,650.61 கிரயத்திலான முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ஐந்து மோட்டார் வாகனங்கள் உண்மையான பயன்பாட்டுக் காலத்தை மதிப்பிடாமல் இன்னமும் பயன்படுத்தப்படுகின்றன. | 28,642,650 | முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் திரண்ட பெறுமானத் தேய்விற்கு சொத்துக்கள் அதன் கிரயத்திற்கு சமமான இதுந்ததுடன் புத்தக பெறுமதி 0 பெறுமதியில் உள்ளது. பயன்பாட்டுக் காலம் மீளாய்வு செய்யப்பட வேண்டியிருக்குமாயின் சொத்துக்களின் கிரயமும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும் மற்றும் மீள்மதிப்பீடு செய்யவேண்டியிருந்த ஒரே வகுதியிலுள்ள சகல சொத்துக்களும் மீள்மதிப்பீடுசெய்யப்பட வேண்டும்.<br><br>வாகனங்கள் உள்ளடங்கலாக இலங்கை மின்னசார சபையால் பயன்படுத்தப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தை மீளாய்வு செய்வதற்கு ஏற்கனவே குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன் குழுவின் சிபார்சுகளின் பிரகாரம், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களின் பயன்பாட்டுக் காலத்தில் | உண்மையான சொத்துக்களின் பெறுமதியை வெளிப்படுத்துவதற்கு முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மாற்றங்களை அடையாளம் கண்டிருக்குமாயில் ஒருங்கிணைந்து அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (ஆ) | பிரதேச செயலகத்தில் செயற்திட்டத்தால் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 40,100,000 ஆன வைப்புக்கள் மீதி தீர்ப்பனவு செய்யப்படாமல் நான்னு ஆண்டுகளிற்கு மேலாக இருந்தது. . | 40,100,000 | சுவீகரிப்புச் செய்பாட்டில் இருக்கின்ற காணிகளின் பெறுமதியில் அண்ணளவாக 25 சதவீத வைப்பிற்கு இலங்கை காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் பிரகாரம், காணி சுவீகரிக்கின்ற செயற்பாடு நடைபெறுவதற்கு நிபந்தனையாக அந்த வைப்புக்கள் செய்யப்பட்டிருந்தது. மன்னார் காணிச் சுவீகரிப்பு உத்தியோகத்தர் ஒருதடவை இழப்பீடு செய்யப்பட்டுள்ளது. இந்த தொகை உண்மையான மதிப்பீடுகள் / வெகுமதிகளிலிருந்து பொருத்தமானவை கழிக்கப்பட வெண்டும்.<br><br>உரிய நேரத்தில் அந்த வேண்டுகை செய்யப்பட்ட போதிலும் மன்னார் பிரதேச செயலகத்தால் செலுத்தப்பட்ட இழப்பீட்டுப் பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. இருந்த போதிலும், தீர்ப்பனவு விபரங்களிற்கான வேண்டுகை விபரங்களுடன் சேர்த்து பிரதேச செயலகத்திற்கு ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் அந்த வைப்புக்களிற்கான மீதி உறுதிப்படுத்தல்கள் வேண்டப்பட்டன.<br><br>ஆகவே, அந்த மீதிகள் வேறு வைப்பக்களின் கீழ் இன்னமும் இருக்கின்றதுடன் காணணி | காணிச் சுவீகரிப்பு செயற்பாடுகள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

உரிமையாளர்களின் தீர்ப்பனவு பட்டியல் இல்லாமல் அகற்றப்படவோ அல்லது மூலதனமாக்கப்படவோ முடியவில்லை.

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க மற்றும் 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றறிக்கை | உள்ளக கணக்காய்வாளரை சேர்க்கப்பட்டோ அல்லது மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. | செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களிற்காக விரிவான உள்ளக கணக்காய்வை இலங்கை மின்சார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் 2017 இல் மேற்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நடவடிக்கைகளின் உள்ளக கயக்காய்வு ஒழுங்காக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய PED/03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2020 யூன் 08 ஆந் திகதிய SEC/2020/03(திருத்திய) ஆம் இலக்க உள்நாட்டு இறைவரித் திணைக்கள சுற்றறிக்கை | செயற்திட்டமானது உரிய ஊழிர்களின் சம்பளங்களிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியை கழிக்காமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து 2020 திசெம்பர் 31 வரை ரூபா 15.76 மில்லியன் தொகையான உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE)/ முற்பணமளிக்கப்பட்ட வருமான வரி (APIT) என்பவற்றினை செலுத்தியிருந்தது. | இலங்கை மின்சார சபை 2020 ஒக்தோபர் மாதம் வரை ஊழியர்களின் APIT செலுத்தியிருந்ததுடன் சபை தீர்மானத்தின் பிரகாரம், ஊழியர்கள் 2020 நவம்பரிலிருந்து ஊழியர்கள் APIT செலுத்துகின்றனர். | ஊழியர்களின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரி கழிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 மார்ச் 23 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க | ஏற்பாடுகளிற்கு முரணாக செயற்திட்ட | இது இலங்கை மின்சார சபையின் கொள்கை மற்றும் | சபையானது சுற்றறிக்கை வேண்டுகையை பின்பற்ற வெண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | உத்தியோகத்தர்களிற்கு 2020 திசெம்பர் 31 வரை ரூபா 23.74 மில்லியன் கூட்டுத் தொகையான விடுமுறைக் கொடுப்பனவு மற்றும் மிகையூதியம் என்பன செலுத்தப்பட்டிருந்தது. | சகல இலங்கை மின்சார சபை ஊழியர்களிற்குமான வழிகாட்டல் என்பவற்றிக்கு அமைவாக உள்ளது. | |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாக கைநூலின் V C (31) ஆம் பிரிவ | செயற்திட்ட பிரிவு புறம்பான காசுப்புத்தகம் பேறுவதற்குப் பதிலாக செயற்திட்டத்தின் பெறுகை மற்றும் கொடுப்பனகளைப் பதிவதற்காக பொதுவான காசுப் புத்தகம் பயன்படுத்தியிருந்தது. | செயற்திட்டத்திற்காக புறம்பான வங்கிக் கணக்குத் திறத்தல் சட்டப்படியாக உள்ளதுடன் சபை அனுமதி வேண்டப்பட்டது அத்துடன இது செயற்திட்ட ஆரம்ப பட்டத்தில் செய்யப்பட்டது. தற்போது செயற்திட்டம் பூர்த்தியாக்கல் கட்டத்தில் உள்ளதுடன் அந்த நேரத்தில் வங்கி கணக்கு திறப்பதற்கு நடைமுறைக்கு சாத்தியமாற்றதாக இருந்தது. செயற்திட்ட கொடுக்கல வாங்கல் அடிப்படையில் புறம்பான காசுப்புத்தகம் அறிக்கையிடல் நோக்கத்திற்காக பேரேட்டு முறைமை ஊடாக பெறமுடியும். | கைநூலில் வேண்டப்பட்டவாறு புறம்பான காசுப்புத்தகம் பேணப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| கூறு | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | தாமதங்களிற்கான காரணங்கள | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|---|
| இயலளவு அதிகரிக்கப்பட்ட காற்றலை மின்வலு உருவாக்கல் | 100 | 87.60 | ஆரம்ப பட்டில் இழப்பீட்டு திகதி 2020 திசெம்பராக இருந்த போதிலும், 2021 மார்ச் அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. நீண்ட கால குறைந்த கிரய மின்சாரம் உருவாக்கல் திட்டம் முறைப்படியாக அடையப்பட்டிருக்கவில்லை | ஈஸ்டர் தாக்ககுதல் (2010 ஏப்ரல்) மற்றும் கோவிட்-19 நோய்தொற்று காரணமான தடங்கல்கள் மற்றும் உப மின் நிலையங்களின் தாக்கம் மற்றும் தயாரின்மையால் விளைந்தது. | ஆரம்ப காலப் பட்டியலின் பிரகாரம், 2020 ஒக்தோபர் 25 ஆக இருந்த செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி ஈஸ்டர் தாக்குதல், கோவிட்-19 நோய்த்தொற்று, பாதகமான பாதிக்கப்பட்ட பொறி இறக்குமதி இலங்கை அரசாங்கத்தின் இறக்குமதி தடங்கல்கள் மற்றும் இயந்திரம் உறுதிப்படுத்தல் பூர்த்தியாக்கும் நேரத்தில் ஒப்பந்த உடன்படிக்கையின் கீழ் வேண்டப்பட்ட இயந்திர உதிரிப்பாகங்கள் என்பவற்றினைக் கருத்தில் கொள்ளாமல் 2021 மார்ச் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், தாமதங்கள் நடுகுடாவில் சேகரிப்பாளர் உப நிலையத்தின் | தேவையற்ற கிரயத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை திட்டமிடப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | வாசிப்பின்மை காரணமாக விளைந்திருந்தது. | |
| முன்னேற்றப்பட்ட மின்சார முகாமைத்துவ முறைமை மீள்செயற்படுத்தல் | 87 | 82 | ஆரம்ப பட்டியல் பூர்த்தியாக்கல் திகதி 2021 சனவரியாக இருந்த போதிலும் 2021 ஏப்ரல் அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. | சர்வதேச பிரயான தடை விதிக்கப்பட்டமை மேற்பார்வை வருகைக்கு தாமதம் விளைவித்தது. | - | தேவையற்ற கிரயத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை திட்டமிடப்பட வேண்டும். |

**3.2 மனிதவள முகாமைத்துவம் தொடர்புபட்ட விடயங்கள்**

| **பதவியணி நிலை** | **பதவிகளின் எண்ணிக்கை** | | | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளருடைய சிபார்சுகள்** |
|---|---|---|---|---|---|
| | **அனுமதிக் கப்பட்டவை** | **அனுமதிக் கப்பட்டவை** | **வெற்றிடங் களின் எண்ணிக்கை** | | |
| செயற்திட்ட பணிப்பாளர் | 3 | 2 | 1 | செயற்திட்ட நடவடிக்கைகளை தடையில்லாமல் செயற்திட்ட காலப்பகுதி முழுவதும் மேவுகை அடிப்படையில் இருக்கின்ற கணக்காளரின் சேவை பெறப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி நடவடிக்கைகளின் சுமுகமான செயற்பாடுகளிற்காக செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் அப் பதவி நிரப்பப்பட வேண்டும். |
| கணக்காளர் | 1 | 0 | 1 | | |
| எந்திரவியல் அத்தியட்சகர் | 8 | 4 | 4 | | |
| சிவில் அத்தியட்சகர் | 4 | 3 | 1 | | |
| இயந்திரவியல் அத்தியட்சகர் | 3 | 1 | 2 | | |
| செயலாளர் | 1 | 0 | 1 | | |
| தரவு பதிவு செயற்படுத்தனர் | 1 | 0 | 1 | | |
| தானியங்கி CAD படவரைஞர் | 1 | 0 | 1 | | |
| சாரதிகள் | 10 | 9 | 1 | | |
| தொழில்திறன் கள ஊழியர்கள் | 12 | 2 | 10 | | |
| தொழிற்றினற்ற கள ஊழியர்கள் | 4 | 1 | 3 | | |
| **மொத்தம்** | **48** | **22** | **26** | | |

3.3 செயற்திட்ட கண்காணிப்பு பிரிவு தொடர்பான விடயங்கள்

| பிரதான பதவியணி | PMU இலுள்ள சேவைக் காலப்பகுதி | வேறு வெளியிடங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் | ஒப்பந்த அடிப்படை / பதில்கடைமை அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டவை | முகாமைத்துவத்தின் பதில் ------------------------------------- | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் -------------------------------------------- |
|---|---|---|---|---|---|
| கணக்காளர் | 3 ஆண்டுகள் | ஆம் | பதில் கடமை அடிப்படை | செயற்திட்ட நடவடிக்கைகளை தடையில்லாமல் செயற்திட்ட காலப்பகுதி முழுவதும் மேவுகை அடிப்படையில் இருக்கின்ற கணக்காளரின் சேவை பெறப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிதி நடவடிக்கைகளின் சுமுகமான செயற்பாடுகளிற்காக செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் அப் பதவி நிரப்பப்பட வேண்டும். |

3.4 காணிச் சுவீகரிப்பு தொடர்பான விடயங்கள்

| காணித்துண்டுகளின் எண்ணிக்கை ------------------------------------------------------ | | | | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளருடைய சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| | சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டவை | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுவீகரிக்கப் பட்டவை | உரிமைாண்மை மாற்றப்பட்டவை | ------------------------------------- | ------------------------------------- |
| கொள்வனவு செய்யப்பட்ட WTG அமைவிடங்கள் (1) | | 1 | 1 | காணிச் சுவீகரிபபுச் (LA) செயற்பாட்டின் முன்னேற்றம் குறித்த நோக்கத்திற்காக காணி அமைச்சால் நியமிக்கப்பட்ட காணிச் சுவீகரிப்பு உத்தியோகத்தரின் (LAO) கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. ஆரம்ப விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல், இழப்பீடு / வட்டி வைப்பிடுதல் மற்றும் CEB/PMU ஆல் முறையான வழியில் நிரப்பப்பட்டிருந்த காணி சுவீகரிப்பு உத்தியோகத்தரால் நெறிப்படுத்துப்படும் போது | எதிர்காலத்தில் பிரச்சனைகளைத் தவிர்ப்பதற்கு உடனடியாக காணியின் உரிமையாண்மையை மாற்றப்பட வேண்டும். |

இலங்கை மின்சார சபை/ செயற்திட்ட முகாமைத்துவப் பிரிவு உத்தியோகபூர்வமாக கட்டுப்படுத்தவில்லை.

காணிச் சுவீகரிப்பு அதிகாரச் சட்டத்தின் உடமையாக்கல்- சான்றிதழ் - ஏற்பாடு 42 இன் உரிமையாண்மை மாற்றல் செயற்பாடு காணிச் சுவீகரிப்பு உத்தியோகத்தரின் (மன்னார்) பொறுப்பாக உள்ளதுடன் இலங்கை காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் (LAA) பொருத்தமான பிரிவுகளை பின்பற்றிய பின்னர் செய்யப்பட்டது. இருந்த பொதிலும், அவசர காணிச்சுவீகரிப்பு ஏற்பாடுகள் 38(அ) இன் கீழான சுவீகரிப்பின் பின்னர் செயற்பாடுகளை பின்பற்றாமையால் உரிமையாண்மை மாற்ற முடியவில்லை.
அவசர காணிச்சுவீகரிப்பு ஏற்பாடுகள் சுவீகரிப்பு திகதியிலிருந்து உரிதுடமை உரிமை மாற்றல் நிகழ்ந்தது. காணிக் அரசாங்க காணிய கருதப்படுமாயின் செயற்திட்ட அமுலாக்கல் முகவருக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக கையளிக்கப்பட்டிருந்தது.
குறித்த உபபிரிவகளின் கீழ் பல்வேறு கட்டங்களின் பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளன.

பிரிவு 35 13 எண்ணிக்கை.

பிரிவு 11 7 எண்ணிக்கை.

பிரிவு 33 25 எண்ணிக்கை.

பிரிவு 15 14 எண்ணிக்கை.

பிரிவு 6 / மீள் திருத்தம் 1 எண்ணிக்கை.

அரச உடமையாக்கப்பட்ட ஒதுக்கீடுகள் 10 எண்ணிக்கை.